Holland Bloorview
Kids Rehabilitation Hospital

# பரிந்துரை வரன்முறைகள் – மாற்றங்கள், பொழுதுபோக்கு மற்றும் வாழ்க்கைத் திறன்கள் சமுகச் சேவைகள்

நிலைமாற்றங்கள், பொழுதுபோக்கு மற்றும் வாழ்க்கைத் திறன்கள் இயலாமையுள்ள குழந்தைகள் மற்றும் இளைஞருக்கான உடல்நலம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பொழுதுபோக்கு சார்ந்த, திறன் உருவாக்குகின்ற செயல்பாடுகளையும் நிஜ உலக அனுபவங்களையும் பயன்படுத்தி கற்றுக்கொடுக்கப்படும். எங்கள் சேவைகள் இளைஞர்கள் இலக்குகளை நோக்கிச் முன்னேற உதவும். அதனால் தாங்களாகவே எப்படி வேலைகளைச் செய்வது என்பதையும் வீடு மற்றும் சமுதாயச் செயல்பாடுகளில் எப்படி ஈடுபடுவது என்பதையும் அவர்கள் கற்றுக்கொள்ள முடியும்.

**வாழ்க்கைத் திறன்கள் என்றால் என்ன?**

வாழ்க்கைத் திறன்கள், வாடிக்கையாளர் தினசரி பல்வேறு இடங்களில் மேற்கொள்ளும் வித்தியாசமான வாழ்க்கைப் பணிகளைக் குறிக்கும், அவையாவன:

- சுய மேலாண்மை
- நட்பு மற்றும் பழகும் திறன்கள்
- சமூக நடவடிக்கை
- பொழுதுபோக்கு அல்லது ஓய்வுநேர நடவடிக்கைகள்
- பணிமேற்கொள்ள தயாராதல் மற்றும் தன்னார்வப் பணிகளில் ஈடுபடுதல்

**நாங்கள் யாருக்குப் பணியாற்றுகிறோம்:**

இந்த கிளையண்ட்களுக்கு:

- 7-18 வயதுடையவர்கள் (இப்பொழுதும் உயர்நிலைப் பள்ளியில் இருந்தால் 21)
- இயலாமையுள்ளவர்கள்
- இலக்குகளை நிர்ணயிக்க முடிந்தவர்கள்
- வாழ்க்கைத் திறன்களைச் செப்பனிட செய்ய விரும்புபவர்கள்
- பொழுதுபோக்கு இலக்குகளில் திறன் பெற விரும்புபவர்கள்

**எங்களுடைய அணியில் யார் இருக்கிறார்கள்?**

- பொழுதுபோக்கு சிகிச்சைமுறை வல்லுநர்கள்
- பொழுதுபோக்கு சிகிச்சைமுறை உதவியாளர்கள்
- தொழில்வழி சிகிச்சையாளர்கள்
- தொழில்வழி சிகிச்சை உதவியாளர்கள்
- வாழ்க்கைத் திறன் பயிற்சியாளர்கள்
- இளைஞர் உதிவியாளர்கள்
- மருத்துவ கவனிப்பு உதவியாளர்கள்

**நாங்கள் என்ன சேவைகளை வழங்குகிறோம்?**

- தனிப்பட்ட இலக்கு நிர்ணயம்
- புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு பயிற்சி செய்வதற்கு பணியாளருடன் 1:1 முறையில் பணிபுரிதல்
- திறன் வளர்ச்சிக் குழுக்கள் மற்றும் பயிலரங்குகள்
- சமூக வளங்கள் மற்றும் திட்டங்களுடன் இணைத்தல்

**வாடிக்கையாளர்கள் என்ன வகையான இலக்குகள் மீது பணிபுரிகிறார்கள்?**

- உணவுத் தயாரிப்பு மற்றும் சமையல் கலை கற்றல்
- பணத்தின் பயன்பாடுகளைக் கற்றல்
- சமூக பொழுதுபோக்குச் செயல்பாடுகளில் ஈடுபடுதல்
- நட்புத் திறன்களைக் கற்றல்
- பொதுப் போக்குவரத்து பயன்பாட்டைக் கற்றல் (எ.கா. சுரங்கப்பாதை / பேருந்துகள், வீல் டிரான்ஸ்)
- ஒரு தன்னார்வலர் வாய்ப்பு அல்லது வேலை பெற தயாராதல்
- சுயமாக வாழ தயாராதல்
- பொருத்தமான பொழுதுபோக்கு உபகரணங்களைப் பயன்படுத்துதல்

இந்தச் சேவை மருத்துவ அல்லது நடத்தைத் தேவைகளுக்கு 1:1 ஆதரவு வழங்குவதில்லை என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். சேவையைப் பெறும்போது 1:1 ஆதரவு தேவைப்பட்டால், வாடிக்கையாளர்கள் / கவனிப்பாளர்கள் தேவையான ஏற்பாடுகளைத் தாங்களாகவே செய்துகொள்ள வேண்டும்.

கூடுதல் தகவல்களுக்கும், இந்தச் சேவை உங்களுக்குச் சிறப்பாகப் பொருந்துவதை உறுதி செய்வதற்கும், தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்: 416-425-6220 ext 6208 அல்லது 6044 ext கூப்பிட்டு நிலைமாற்றம், பொழுதுபோக்கு மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சி சந்திப்புக்கு தகவலைத் தெரிந்து கொண்டு முன்பதிவு செய்யவும்.

தயவுசெய்து பரிந்துரை படிவத்தை ஆன்லைனில் இங்கே

**Holland Bloorview Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road, Toronto, ON M4G 1R8
416-425-6220 **பதாளைகபசி**: 800-363-2440
**பதாளைநகல்**: 416-425-6591
**www.hollandbloorview.ca**

University of Toronto (டொராண்டோ